விரிவுபடுத்தப்படுமா கிராமப்புரங்களில் வழிகாட்டி நிலையங்கள் இல்லாவிட்டால், பதிவு செய்யப்பட்ட மாதர் சங்கங்கள் மூலமாக கடன் பெற, இதர வசதிகள் பெற வழி வகைச் செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, வழி காட்டி நிலையங்கள் மூலமாக கிராமப்புற விதவைப் பெண்களும் பயனடையும் வகையில்தான் அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

திரு. கே. சௌந்திரராஜன்: தலைவரவர்களே, சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் விதவைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதாக குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிட விரும்புவது அவர்கள் விதவையானவுடனே அவர்களுக்கு வேலை வாங்கித் தருகிற பெரும் பொருப்பை அரசு ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு குறிப்பிட்ட கால வரையறைக்குள் வேலை கொடுத்து, அதன் மூலம் நிரந்தரமான பரிகாரம் அளிக்கும் திட்டம் ஏதாவது அரசின் ஆய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; தலைவரவர்களே, மூலக் கேள்வி விதவைகள் சுய வேலை வாய்ப்புப் பெறும் திட்டம் பற்றியது அரசு வேலை தேடி கொடுப்பது என்பது, அவர்களுடைய தகுதிக் கேற்ப தான் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். ஆனால், சுய வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின் மூலம் விதவைகளுக்கு இந்த அரசைப் பொருத்த வரையில் என்ன என்ன உதவிகளைச் செய்து கொடுக்க முடியுமோ அவற்றை செய்து கொடுக்க அரசு தயாராக இருக்கிறது.

மகளிர் முன்னேற்ற வாரியம்.

406—வினா எண். 21790 திரு. எம். சின்னசாமி மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

மகளிர் முன்னேற்ற வாரியம் (women welfare corpration) மூலம் 1983-84 ஆண்டிற்கு எத்தனை பேருக்கு உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 12-12-1983 முதல் செயல்பட்டு வருகிறது 1983-84 இல் இக்கழகம் நேரடியாக உதவி அளிக்க திட்டங்கள் ஏதும் உறுவாக்கவில்லை:

1984 மார்ச் 22]

திரு.எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே 1983–84–ஆம் ஆண்டிற்கான நேரடியாக திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த வாரியம் எப்போது உறுவாக்கப்பட்டுள்ளது. அதற்கு எவ்வளவு நிதியை அரசு ஒதுக்கியிருக்கிறது? என்னென்ன திட்டங்களை எதிர்காலத்தில் பெண்களுக்காக தயாரித்துள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 12—12—1983 முதல செயல்பட்டு வருகின்றது. இதற்ாக மாநில அரசு ரூ. 1 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறது. என்னென்ன திட்டங்கள் என்ற விவரம் இப்போதுதான் மகளிர் மேம்பாட்டுக் கழகம் உறுவாக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் தான் அதை ஆராய்ந்து என்னென்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 390,391,392 ஆகியவை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உறையின் தொடக்கத்தில் (1) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

தகவல் கோரல்.

அ) பி. அண்ட். சி. மில். தொழிலாளர்க்ள் வேலை நிறுத்தம்.

திரு சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பி. அண்ட். சி. மில் தொழிலாளர்கள் 68 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பி. அண்ட். சி. தொழிலாளர்களைப் பற்றி இங்கே என்ன செய்யச் சொல்கிறீர்கள் கன்சிலியேஷனுக்குப் போக வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும். ஏதாவது முக்கியமான அம்சம் இருந்தால் சொல்லுங்கள்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS